# மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமையும் பிரயோகமும்: பதுளைத் தேர்தல் மாவட்டத்தில் 2015ஆம் 2020ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**செல்லதுரை புஸ்பகுமார், ஆறுமுகம் யோகராஜா**
சமூக விஞ்ஞானங்கள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*siva7pk@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**

நவீன ஜனநாயக அரசின் இறைமையானது மக்களுக்கு சொந்தமானதாகும். மக்கள் இறைமை என்ற எண்ணக்கருவானது அரசின் மீயுயர் அதிகாரத்தின் உரித்து மக்களுக்கு சொந்தமானது என்பதாகும். மக்களாட்சி தத்துவங்களில் ஒன்றாக வாக்குரிமை காணப்படுகின்றது. இவ் விலைமதிக்க முடியாத வாக்குரிமையின் பிரயோகமானது ஆக்கபூர்வமானதாக அமைய வேண்டியது அவசியமாகும். அண்மை காலங்களில் இலங்கையில் வாக்குரிமையின் பிரயோகம் தொடர்பிலான விடயங்கள் பெரிதும் பேசப்பட்ட ஒன்றாக காணப்படுகின்றது. இலங்கையில் மலையக தமிழ் வாக்களார்களில் பெரும்பாலானவர்கள் பெருந்தோட்டங்களிலேயே வாழ்கின்றனர். ஆதலால் தங்கள் வாழ்கையினை முன்னோக்கி நகர்த்திச் செல்ல தங்களது அரசியல் பிரதிநிதிகளை சார்ந்திருப்பது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் பதுளை தேர்தல் மாவட்ட மலையக தமிழ் வாக்காளர்கள் தமது வாக்குரிமையின் பிரயோகம் தொடர்பில் காட்டும் அசமந்தமான போக்கு அவர்களுடைய பிரதிநிதித்துவத்தில் தாக்கம் செலுத்துவதாகக் காணப்படுகின்றது. இம் மக்கள் தங்களுக்காக இரண்டு தமிழ் பிரதிநிதித்துவத்தை பெற்றுள்ள நிலையில் தமக்கான மேலதிகமாக ஒரு பிரதிநிதித்துவத்தை பெற வேண்டிய நிலையில் அவ்வாய்ப்பினை 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தவறவிட்டனர். இப்பிரச்சினையினை மையமாகக் கொண்டு இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது. இவ்வாய்வினூடாக வாக்குரிமையின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு, 2015ஆம் ஆண்டு, 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் இம்மக்களின் வாக்குரிமையின் பிரயோகம், பிரதிநிதிகளுடைய செயற்பாடுகள் என்பன நோக்கங்களாகக் கொண்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான முதலாம் நிலைத்தரவுகள் வினாக்கொத்து மூலமாகப் பெறப்பட்டுள்ளதோடு, இரண்டாம் நிலைத்தரவுகள் ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், அறிக்கைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றில் இருந்து பெறப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்ட தரவுகள் Excel மென்பொருள் ஊடாக பண்புசார் மற்றும் அளவுசார் முறைமைகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பண்புசார் தரவுகள் விபரண ரீதியிலான முறையிலும் அளவுசார் தரவுகள் எளிய புள்ளிவிபர முறையிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்***: *தேர்தல், பிரதிநிதித்துவம், வாக்களார்கள், வாக்குரிமை, ஜனநாயகம்.*

## அறிமுகம்

ஒரு நாட்டின் பிரஜைகள் (Citizens) அந்த நாட்டின் உண்மையான உரிமையாளர்களாவர். பிரஜைகள் கூட்டாக இணைந்து தெரிவு செய்துக் கொள்ளும் பிரதிநிதிகளைக் கொண்டு ஒரு தேசத்தை ஆளும் அரசாங்கம் உருவாக்கம் பெறுகின்றது. வாக்குரிமை (Suffrage) எனும் விலைமதிக்க முடியாத உரிமையை (Rights) பயன்படுத்தி அந்த ஆட்சியில் மக்கள் இணைந்துக் கொள்கின்றார்கள். ஒரு நாட்டிற்குரிய தகைமை பெற்ற சகல பிரஜைக்கும் இனம், மதம், மொழி, சாதி, குலம், கல்வி, சொத்துரிமை, பிறப்பு, பிறப்பிடம், ஆண், பெண் ஆகிய எதுவித பேதங்களும் அற்ற வகையில் நாட்டின் அதிகார நிருவாகத்தில் பங்கேற்கும்

உரிமையும், அத்துடன் தங்களுக்கென ஒரு பிரதிநிதியை நியமிப்பதற்கான உரிமையும் கொண்டதுவே சர்வஜன வாக்குரிமையாகும். சர்வஜன வாக்குரிமையின் மூலம், மக்கள் இறைமை பாதுகாக்கப்படுவதற்கான அதிகாரம் மக்களுக்கு உரித்தாகின்றது. மற்றொரு வகையில் கூறுவதானால், தனக்காகவும், நாட்டிற்காகவும் தீர்மானத்தை எடுக்கக்கூடிய முக்கிய பொறுப்பு மக்களுடையதாகின்றது. மன்னர் ஆட்சிக் காலத்தில் இவ்வாறான விடயங்கள் தொடர்பாக மன்னர் மாத்திரமே முக்கிய தீர்ப்பாளராக விளங்கினார். மன்னர் ஆட்சியை மாற்றியமைத்து ஜனநாயக ஆட்சி முறையின் அடிப்படையில் குடியரசுகள் உருவாகுவதற்கான மூலகாரணமாக அமைந்தது சர்வஜன வாக்குரிமை முறையாகும்.

இலங்கையானது காலனித்துவக் காலத்தில் 1931ஆம் ஆண்டு சர்வசன வாக்குரிமையினைப் பெற்றது. இது மலையக மக்களையும் உள்ளடக்கியதாகவே வழங்கப்பட்டது (Sarath, 2016). காலப்போக்கில் பிரஜாவுரிமை சட்டம், பாராளுமன்ற திருத்தச்சட்டம் போன்ற சட்ட ஏற்பாடுகளினால் இம் மக்களில் பெரும்பான்மையோர் வாக்குரிமையினை இழந்ததன் தாக்கம் பின்னரான காலங்களில் பாராளுமன்றில் தங்களது பிரதிநிதித்துவத்தையும் இழந்தனர் (Nadesan, 1993). அவ்வாறு இருக்க இன்று மலையக மக்களுக்கு அவ்வாறானதொரு பிரச்சனை நடைமுறையில் இல்லை. இருப்பினும் இம் மக்களின் வாக்குரிமையின் பிரயோகம் தொடர்பில் விமர்சனங்கள் எழுந்த வகையிலேயே இருகின்றன. குறிப்பாக பதுளை தேர்தல் மாவட்ட மலையக தமிழ் வாக்காளர்கள் தமது வாக்குரிமையின் பிரயோகம் தொடர்பில் காட்டும் அசமந்தமான போக்கு அவர்களுடைய பிரதிநிதித்துவத்தில் தாக்கம் செலுத்துவதாகக் காணப்படுகின்றது. இம் மக்கள் தங்களுக்காக இரண்டு தமிழ் பிரதிநிதித்துவத்தை பெற்றுள்ள நிலையில் தமக்கான மேலதிகமாக ஒரு பிரதிநிதித்துவத்தை பெற வேண்டிய நிலையில் அவ் வாய்ப்பினை 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தவற விட்டனர். இப் பிரச்சினையினை மையமாகக் கொண்டு இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது. இவ் ஆய்வினூடாக வாக்குரிமையின் முக்கியத்துவம் தொடர்பான விளிப்புணர்வு, 2015ஆம் ஆண்டு, 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் இம் மக்களின் வாக்குரிமையின் பிரயோகம், பிரதிநிதிகளுடைய செயற்பாடுகள் போன்ற நோக்கங்களைக் கொண்டு ஆராய்வோம்.

**இலக்கிய மீளாய்வு**

இரகுநாதன்.க என்பவரினால் எழுதப்பட்ட தேர்தல் முறைமைகளும் அவற்றின் பரிமாணங்களும். என்ற நூலினூடாக இலங்கையில் தேர்தல் முறை பற்றிய விளக்கங்கள் கூறப்பட்டுள்ளது. மேலும் தேர்தல் ஒன்றின் முக்கியத்துவம், வாக்காளர்களின் நிலை, அவர்களின் அறிவு நிலை பற்றியும் தேர்தல் ஒன்று ஒழுங்கு செய்யப்படும் முறை பற்றியும் பிரதிநிதித்துவ அரசாங்கம் முறைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. வயது வந்தோர் வாக்குரிமை பற்றிய விளக்கங்களையும் வாக்களிக்கத் தகுதி இன்மைக்கான காரணங்கள் பற்றியும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனோடு ஒரு நாட்டிற்கு எவ்வாறான தேர்தல் முறை மிகச் சிறந்தது என்ற கருத்தினைத் தருவதாகவும் இந்நூல் அமையப்பெற்றுள்ளது.

ஜயதேவ உயங்கொட என்பவரினால் எழுதப்பட்ட தோட்டப்புற அமைப்பின் மனித உரிமைகள். என்ற நூலானது தோட்டப்புற அமைப்பு பற்றியும், அவர்களின் உரிமைகள்

அதில் சிவில், அரசியல் உரிமைக்குள்ளான பிரஜாவுரிமை, வாக்குரிமை பற்றியும், ஏனைய உரிமைகளான சிறுவர் உரிமை, பொருளாதார உரிமை, சமூக கலாசார உரிமைகள் பற்றியும், அவர்களின் துன்ப நிலைகள் பற்றியும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடு மற்றும் தொழிற்சங்கங்கள் பற்றியும் விளக்குவதாக அமைந்துள்ளது. இதனோடு இந்நிறுவனங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்ற ஆலோசனையினையும் வழங்குவதாக இந் நூல் அமையப்பெற்றுள்ளது.

சந்திரபோஸ்.ஏ.எஸ், ரமேஷ்.இரா என்போரினால் எழுதப்பட்ட இலங்கையில் தேயிலை பெருந்தோட்ட சமூகம் 150 வருடங்கள் 1867 தொடக்கம் 2017. என்ற நூலானது மலையக மக்களுடைய வாழ்க்கை, தொழில், கல்வி, சமூகநிலை, உரிமை, ஆட்சி முறை, பெண்களுடைய சமூகநிலை, பண்பாட்டு அடையாளங்கள் அவற்றை விளக்கும் வகையில் உள்ளது. ஆறு பகுதிகளை கொண்டுள்ள இந்நூலானது நான்காவது பகுதியில் பெருந்தோட்ட மக்களுடைய உரிமைகள் பற்றிய விடயங்களை குறிப்பிட்டுள்ளதோடு மனித உரிமைகள் சட்டம் தொடர்பாகவும் விளக்குகின்றது. குறிப்பாக இலங்கை அரசியலில் மலையக தமிழ் கட்சிகளின் வகிபாகம் என்ற கட்டுரையில் மலையகத் தமிழ்மக்களின் உரிமைப் பறிப்பு சம்பந்தப்பட்ட விடயங்கள் விளக்கப்பட்டுள்ளது. அதனோடு வாக்குரிமை இன்றி அவர்கள் அரசியலில் எவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுத்தார்கள் என்பன பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் எவ்வாறு கிடைத்த வாக்குகளைக் கொண்டு பிரதிநிதித்துவத்தினை அடைந்து ஏனையவர்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது என்பது தொடர்பாகவும் கட்டுரை விளக்குகின்றது.

லோறன்ஸ்.அ, என்பவரினால் எழுதப்பட்ட ‘மலையகம்: சமகால அரசியல் - அரசியல் தீர்வு’ என்ற இந்நூலினூடாக மலையக மக்கள் சார்ந்த பல்வேறு விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மலையக மக்களுடைய குடியேற்றம், அவர்களுடைய அடையாளம், அவர்களுடைய குடியுரிமை பறிப்பு என்பன பற்றிய தெளிவான விளக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனோடு மக்களுடைய அண்மைக்கால பிரச்சினைகள் மற்றும் இலங்கையில் பரவி வாழும் அவர்களுடைய குடியேற்றம், மலையக மக்களுடைய அடையாளங்கள் போன்ற பல்வேறு விடயங்களும் அடையாளம் தொடர்பாக எழுகின்ற பிரச்சனைகள் தொடர்பாகவும் இந்நூல் ஆராய்கின்றது. மேலும் இம் மக்களுடைய பிரதிநிதித்துவம் பற்றியும் அந்த பிரதிநிதித்துவத்தில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் சம்பந்தமாகவும் இந்நூல் விளக்குகின்றது.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வானது எண்சார் தரவுப்பகுப்பாய்வு, பண்புசார் தரவுப்பகுப்பாய்வு ஆகிய இரு முறைகளையும் பயன்படுத்தி கலப்பு தரவுப்பகுப்பாய்வு அணுகுமுறையினூடாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எண்சார் தரவுப்பகுப்பாய்வு அடிப்படையில் 2015 மற்றும் 2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் வரைபடமாகவும், அட்டவணையாகவும் காட்டப்பட்டுள்ளன. பண்புசார் அடிப்படையில் தேர்தல்களில் பதுளைத் தேர்தல் மாவட்ட

மலையகத் தமிழ் வாக்காளர்களின் பங்குப்பற்றல், இத் தேர்தல்களில் தமிழ் வாக்காளர்களின் தீர்மானங்கள் என்பன பகுப்பாய்வுச் செய்யப்பட்டுள்ளது.

### *தரவு சேகரிப்பு முறைகள்*

*முதலாம் நிலைத்தரவு*

இவ் ஆய்விற்கான முதலாம் நிலைத்தரவுகளானது வினாக்கொத்து முறைமையினூடாக பெறப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்காக வினாக்கொத்து மூலமாக தரவுகளைப் பெற படையாக்கப்பட்ட எழுமாற்று மாதிரி எடுப்பு நுட்ப முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் படி பதுளை மாவட்டத்தில் உள்ள 9 தேர்தல் தொகுதியிலும் உள்ள மலையகத் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக 50 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டுள்ளது. இது 2463:1 என்ற வகையில் வழங்கப்பட்ட வினாக்கொத்துகளுக்கான எழுமாற்று மாதிரி எடுப்பு பின்வருமாறுத் தெரிவுச் செய்யப்பட்டுள்ளன.

*இரண்டாம் நிலை தரவுகள்*

இரண்டாம் நிலைத்தரவுகளாக இவ் ஆய்வு சம்பந்தமான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள், அறிக்கைகள் என்பவற்றில் இருந்து பெறப்பட்ட தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**எழுமாற்று மாதிரி எடுப்பு விபரம்**

| **தேர்தல் தொகுதி** | **மலையகத் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை** | **வழங்கப்பட்ட வினாக்கொத்து 0.04%** |
|---|---:|---:|
| பசறை | 28,901 | 12 |
| பதுளை | 8,666 | 3 |
| வெளிமட | 8,370 | 3 |
| வியலுவ | 5,224 | 2 |
| ஹாலிஎல | 20,865 | 9 |
| ஊவாபரணகம | 7,423 | 3 |
| மகியங்கனை | 210 | 0 |
| பண்டாரவளை | 17,343 | 7 |
| ஹப்புதலை | 26,415 | 11 |
| **மொத்தம்** | **123,147** | **50** |

**ஆதாரம்** *: பதுளை மாவட்ட செயலகம் (2022)*

### *தரவுப்பகுப்பாய்வு*

மாதிரி எடுப்பு முறையின் மூலமாக தெரிவு செய்யப்பட்ட நபர்களிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்திலிருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பதுளை தேர்தல் மாவட்ட மலையக தமிழ் வாக்காளர்களின் வாக்குரிமையின் பிரயோகம் தொடர்பான ஆய்வு இடம்பெற்றுள்ளது. சேகரிக்கப்பட்ட தரவுகள் நுஒஉநட மென்பொருள் ஊடாக பண்புசார் மற்றும் அளவுசார் முறைமைகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில்

பண்புசார் தரவுகள் விபரண ரீதியிலான முறையிலும் அளவுசார் தரவுகள் எளிய புள்ளிவிபர முறையிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

மாவட்டத்தில் உள்ள ஒன்பது தேர்தல் தொகுதிகளுக்கும் மலையகத் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வினாக்கொத்தினூடாக தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் வகையிலும் இவ் அத்தியாயம் அமைகின்றது. அதன்படி முதலாவது பகுதியில் வினாக்கொத்தின் மூலமாக தரவுகளை வழங்கிய நபர்களின் விபரங்கள் பெறப்பட்டுள்ளன. இரண்டாவது பகுதியில் மூன்று பிரிவுகளின் கீழ் வினாக்கொத்தினூடாக தகவல்கள் பெறப்பட்டதுள்ளது. இதில் முதலாவது பிரிவில் வாக்காளர்களின் வாக்களிப்பு சம்பந்தமான தெளிவுத் தொடர்பான விடயங்களும் இரண்டாவது பிரிவில் 2015 மற்றும் 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் வாக்களிப்பின் பிரயோகம் தொடர்பான விடயங்கள், பிரிவு மூன்றில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வாக்குரிமையின் எதிர்கால பிரயோகம் தொடர்பான விடயங்கள் என்ற வகையில் தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**2015ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் - பதுளை மாவட்டம்**

| கட்சி / குழுக்கள் | பெற்ற வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி - UNP | 258,844 | 54.76% | 5 |
| ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு – UPFA | 179,459 | 37.97% | 3 |
| மக்கள் விடுதலை முன்னணி - PLF | 21,445 | 4.54% | 0 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் - CWC | 10,259 | 2.17% | 0 |
| வேறு – Others | 2,675 | 0.56% | 0 |

**ஆதாரம்** : *https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/parliamentary-elections/general-election-2015.pdf*

**பதுளை மாவட்ட விருப்பு வாக்குகளின் அடிப்படையில் வெற்றிப் பெற்றவர்களின் விபரங்கள் - 2015**

**ஐக்கிய தேசியக் கட்சி - UNP**

1. ஹரீன் பிரணாந்து - 200,806 வாக்குகள்
2. ரவிந்ர சமரவீர - 58,507 வாக்குகள்
3. சமிந்த விஜேசிறி - 58,291 வாக்குகள்
4. அரவிந்த குமார் - 53,741 வாக்குகள்
5. வடிவேல் சுரேஷ் - 52,378 வாக்குகள்

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு – SLFP**

1. நிமல் சிறிபாலடி சில்வா - 134,406 வாக்குகள்
2. சாமர சம்பத் - 64,418 வாக்குகள்

3. தேனுக விதான கமகே - 43,517 வாக்குகள்

2015ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பதுளை மாவட்டத்தில் தமிழ் வேட்பாளர்கள் இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். உண்மையில் இந்த தேர்தல் மலையக தமிழ் மக்களுக்கு மீண்டும் தமது பிரதிநிதிகளை பாராளுமன்றம் அனுப்புவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. இதன்படி அரவிந்தகுமார் 53,741 வாக்குகளையும் வடிவேல் சுரேஷ் 52,378 வாக்குகளையும் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் பெற்றுக்கொண்டனர். ஆனால் தனித்துப் போட்டியிட்ட தமிழ் தரப்பான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எவ்வித ஆசனங்களையும் பெறவில்லை. குறிப்பாக அவர்கள் மொத்தமாக 10,259 வாக்குகளையே பெற்றனர் (Adaderana,2015).

தமிழ் வேட்பாளர்கள் அனைவரும் ஒரு கட்சியில் இருந்து கேட்கின்ற போதே அந்த கட்சி சார்பான ஆசனங்களை குறிப்பிட்ட தொகை வாக்காளர்களுக்கு மத்தியில் பெறமுடியும் என்பதே சாத்தியம். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 11 வேட்பாளர்களைக் கொண்டு தேர்தலில் களம் இறங்கிய நிலையிலும் அவர்களால் ஓர் ஆசனத்தைக் கூட பெற முடியாத நிலையே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் - பதுளை மாவட்டம்**

| **கட்சி / குழுக்கள்** | **பெற்ற வாக்குகள்** | **சதவீதம்** | **ஆசனங்கள்** |
|---|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன- SLPP | 309,538 | 62.06% | 6 |
| ஐக்கிய மக்கள் சக்தி – SJB | 144,290 | 28.93% | 3 |
| தேசிய மக்கள் சக்தி – JJB | 19,308 | 3.87% | 0 |
| ஐக்கிய தேசியக் கட்சி – UNP | 9,163 | 1.84% | 0 |
| வேறு – Others | 16,496 | 3.30% | 0 |

**ஆதாரம்** : *https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/parliamentary elections/Badulla_R2(2020)*

**பதுளை மாவட்ட விருப்பு வாக்குகளின் அடிப்படையில் வெற்றிப் பெற்றவர்களின் விபரங்கள் - 2020**

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - SLPP**

1. நிமல் சிறிபால த சில்வா - 141,901 வாக்குகள்
1. சுதர்ஷன தெனிபிட்டிய - 71,766 வாக்குகள்
2. தேனுக விதானகமகே - 68,338 வாக்குகள்
3. சாமர சம்பத் தஸநாயக்க - 66,393 வாக்குகள்
4. டிலான் பெரேரா - 53,081 வாக்குகள்
5. ஜானக திஸ்ஸகுட்டியாராச்சி - 50,151 வாக்குகள்

**ஐக்கிய மக்கள் சக்தி - SJB**

1. வடிவேல் சுரேஸ் - 49,762 வாக்குகள்
2. அரவிந்தகுமார் - 45,491 வாக்குகள்

3. சமிந்த விஜேசிறி - 36,291 வாக்குகள்

தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் 2015ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலை விட 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் மலையக தமிழ் மக்கள் தங்களுடைய வாக்குகளை பிரயோகித்த விதம் என்பது வேறுபட்டுச் செல்வதை அறிய முடிகின்றது. குறிப்பாக 2015ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு தமிழ் வேட்பாளர்களும் (அரவிந்தகுமார் - 45,491 வாக்குகள், வடிவேல் சுரேஸ் - 49,762 வாக்குகள்) இந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்டனர் (Ceylontoday, 2020). இருப்பினும் அவர்கள் பெற்ற விருப்பு வாக்கு என்பது கடந்த தேர்தலைவிட இந்தத் தேர்தலில் குறைவாகவே காணப்படுகின்றது. அதனோடு நிராகரிக்கப்பட்ட வாக்குகள் என்ற வகையில் 38,621 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு வேட்பாளர் தெரிவு செய்யப்பட வேண்டிய எண்ணிக்கையிலான வாக்கு சதவீதமாக காணப்படுகின்றது.

2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் உண்மையில் இரண்டு தமிழ் வேட்பாளர்கள் தெரிவு செய்வதற்கு மேலாக மேலும் ஒரு தமிழ் வேட்பாளரை பாராளுமன்றத்திற்கு அனுப்பக் கூடிய வாய்ப்பினை உருவாக்கிய போதும் மலையகத் தமிழர்களின் கவனயீனம், வாக்களிப்பதற்கான விழிப்புணர்வு இன்மை என்பதன் காரணமாக வாக்குகளை நிராகரிக்கப்பட்ட வாக்குகளாகவும் சில வாக்காளர்கள் பெரும்பான்மை கட்சியின் வியூகத்திற்கு அமைய பயன்படுத்தியுள்ளமையும் புலனாகின்றது.

***2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் மேலதிக தமிழ் வேட்பாளர் இழப்பு***

2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பாக ஒரு தமிழ் வேட்பாளராக செந்தில் தொண்டமான் மாத்திரமே நிறுத்தப்பட்டார். பாராளுமன்ற தேர்தலில் முடிவுகளின் அடிப்படையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு ஆறு ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. அந்த ஆறு ஆசனங்களில் தமிழ் வேட்பாளர் உள்ளடக்கவில்லை. இது இவருக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு மட்டுமன்றி ஏனைய வாக்காளர்களுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

குறிப்பாக இவரின் தோல்விக்கு காரணங்கள் என்ற வகையில் எதிரணியில் ஏற்கனவே பாராளுமன்றத்திற்கு சென்ற இரண்டு வேட்பாளர்கள் களமிறக்கப்பட்ட நிலையில், இம் மாவட்டத்தை பொறுத்தவரையில் தமிழ் வாக்குகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது ஆகவே வாக்குகள் சிதறடிக்கப்படும் ஒரு நிலையும் காணப்பட்டது. அதனோடு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் தமிழ் வேட்பாளர் ஒருவர் போட்டியிட வைத்தது கட்சி வகுத்த தந்திரமாகவும் நோக்கப்படுகின்றது. காரணம் பலம்பொருந்திய வேட்பாளர்களை அந்த கட்சி களமிறக்கிய நிலையில் தமிழ் வேட்பாளரின் வாக்குகளை கட்சிக்கு பெற்று ஆசனங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு விருப்பு வாக்கின் அடிப்படையில் பலம்பொருந்திய பெரும்பான்மையின வேட்பாளர்கள் தெரிவு செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்பட்ட நிலையில், அது அப்படியே நடந்தது. இதனை இந்தத் தேர்தலின் முடிவுகளின் வாயிலாக அறிய முடிகின்றது.


மேலும் செந்தில் தொண்டமான் 39,240 வாக்குகளை பெற்றிருந்தார். இவர் வெற்றிப் பெறுவதற்கு 10,911 வாக்குகள் பின்தங்கி இருந்தார். எனவே மக்கள் தங்கள் வாக்குகளை நிராகரிக்கப்பட்ட வாக்குகளாக பிரயோகிக்காமல் சரியாக பயன்படுத்தப்பட்டிருப்பின் தமிழ் பிரதிநிதித்துவம் ஒன்று மேலதிகமாகக் கிடைக்கப்பெற்றிருக்கும். எதிரணியில் 36,291 வாக்குகளை பெற்று அக்கட்சி சார்பில் பாராளுமன்றத்திற்கு தெரிவானார் என்பது குறிப்பிடத் தக்கது. முடிவாக தமிழ் பிரதிநிதித்துவம் ஒன்று இல்லாமல் போனதற்கு இம்மாவட்ட தமிழ் மக்களின் விருப்பு வாக்கு பகிர்வில் அக்கறை கொள்ளாமைக் காரணமாகின்றது. பதுளை மாவட்டத்தில் 1947 ஆம் ஆண்டு இரண்டு தமிழ் பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றது. இன்றுவரை அதன் எண்ணிக்கை மாறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

*வாக்குரிமை பற்றிய தெளிவுத் தொடர்பான தகவல்கள்*

வாக்குரிமையினை பெற்ற ஒவ்வொருவரும் அந்த வாக்குரிமை தொடர்பான தெளிவினை பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். குறிப்பாக வாக்குரிமை தொடர்பான தெளிவு காணப்படுகின்ற போதுதான் அந்த வாக்குரிமையை சரியாகப் பயன்படுத்த முற்படுவார்கள். பதுளை தேர்தல் மாவட்ட தமிழ் வாக்காளர்களின் வாக்குரிமை தொடர்பான தெளிவு தொடர்பாக ஆராய வேண்டியது அவசியமாகின்றது. அதனடிப்படையிலேயே வினாக்கொத்து மூலமாக பதுளை தேர்தல் மாவட்ட தமிழ் வாக்காளர்களின் வாக்குரிமை தொடர்பான தெளிவு சம்பந்தப்பட்ட தரவுகள் திரட்டப்பட்டுள்ளன.

- **வாக்குரிமையின் முக்கியத்துவம் பற்றிய மக்களின் புரிந்துணர்வு**

**வரைபடம் 1**




**ஆதாரம் : கள ஆய்வு (2022 ஜுன்)**


தரவுகளின் அடிப்படையில் வாக்குரிமை கட்டாயம் கிடைக்க வேண்டிய உரிமை என்பதை பெரும் வாரியாக அறிந்த பதுளை தேர்தல் மாவட்ட மலையக மக்கள் வாக்குரிமையின் முக்கியத்துவம் தொடர்பில் ஓரளவு பின்தங்கி இருப்பதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக 56% மான மக்கள் வாக்குரிமையின் முக்கியத்துவத்தினை அறிந்துள்ளார்கள். அதே நேரம் 12% மான மக்கள் வாக்குரிமையின் முக்கியத்துவம்

அறியாதவர்களாகவே உள்ளனர். இந்நிலையில்தான் இம்மக்கள் தங்களுடைய வாக்கின் பிரயோகத்தில் பொறுப்பற்ற தன்மையை வெளிக்காட்டுகின்றனர். இதன் பிரதிபலனை கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வாக்குரிமையின் முக்கியத்துவத்தை ஓரளவேனும் அறிந்தவர்கள் 32% மானவர்களாக காணப்படுகின்றனர். இவர்களின் வாக்கு பிரயோகம் நிச்சயமற்ற தன்மையாகவே காணப்படும் போக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தாங்களின் முடிவு பிழையானது என்பதை தேர்தல் முடிந்து பிற்பட்ட காலங்களிலே அரிய கூடியவர்களாக இவர்கள் காணப்படுகின்றார்கள்.

*வாக்களிப்புத் தொடர்பான அறிவூட்டல்கள்*

வாக்குரிமை தொடர்பான அறிவூட்டல்கள் என்ற வகையில் தேர்தல் காலங்களில் அரசினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் (NGO) ஊடகங்களின் மூலமாகவும் வாக்களிப்பு தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. பதுளை மாவட்ட மலையகத் தமிழ் வாக்காளர்களின் வாக்களிப்பு தொடர்பான அறிவூட்டல் எவ்வகையில் அவர்களின் மத்தியில் சென்றடைந்துள்ளது என்பதற்கான தரவுகள் பெறப்பட்டுள்ளது. அதனைப் பின்வரும் வரைபடத்தின் மூலமாக காணலாம்.

**வரைபடம் 2**




**ஆதாரம் : கள ஆய்வு (2022 ஜுன்)**

பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வாக்களிப்பு தொடர்பான அறிவூட்டல்கள் இப்பிரதேச மலையகத் தமிழ் வாக்காளர்களில் 52மூ மான வாக்காளர்களுக்கு போதுமானதாக இருப்பதாகவும், 32% மான வாக்காளர்களுக்கு வாக்களிப்பு தொடர்பான அறிவூட்டல் ஓரளவிற்கு விளிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் குறிப்பிட்டுள்ளனர். இங்கு 16மூ மான வாக்காளர்களின் மத்தியில் வாக்களிப்பு தொடர்பான அறிவூட்டல்கள் போதுமானதாக இல்லை என்ற நிலையில் காணப்படுகின்றனர். இங்கு நாம் ஆராய்கையில். இந்த அறிவூட்டல்கள் சரியான முறையில் இவ் வாக்காளர்களைச் சென்றடையாமையே

அவர்களுடைய வாக்குப் பிரயோகத்தில் ஆக்கபூர்வமான விடயங்கள் ஏற்படாமல் இருப்பதற்கான காரணமாகக் குறிப்பிடலாம்.


***2015 மற்றும் 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் வாக்குரிமையின் பிரயோகம்***

2015 மற்றும் 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் பதுளை மாவட்ட தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் இம்மாவட்ட மலையகத் மக்களின் வாக்களிப்பு, பிரதிநிதித்துவம் என்பவற்றை பகுப்பாய்விற்கு உட்படுத்த முடிகிறது. வாக்களித்த மக்கள் தேர்தல் தொடர்பில் கொண்டுள்ள அக்கறையும் அவர்களின் வாக்கு பிரயோக முறை, வாக்களித்ததின் பின்னரான அவர்களின் தேர்வு தொடர்பான கருத்து, வாக்கினை பிரயோகிக்கும் போது அவரிடம் தாக்கம் செலுத்திய காரணிகள் என்பன தரவுகளாகப் பெறப்பட்டுள்ளது.

***வாக்களிப்பின் தெரிவு தொடர்பான திருப்தி நிலை***

பல்வேறுபட்ட நோக்கங்களை கொண்டு தமது வாக்குரிமையின் மூலமாக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி தொடர்பில் அவர்கள் வெற்றியடைந்த பின்னரான காலங்களிலும் மனநிறைவான தெரிவாகவே வாக்காளர்கள் திருப்தியடைகின்றனர். ஆனால் கால ஓட்டத்தின் பின்னர் தங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி தொடர்பில் மாறுபட்ட மனப்பாங்கினை வாக்காளர்கள் கொள்கின்றனர். அதனடிப்படையிலேயே இப்பிரதேசத்தில் மலையக தமிழ் வாக்காளர்களிடம் தகவல்கள் பெறப்பட்டுள்ளது. இதனை பின்வரும் வரைபடத்தின் மூலம் காணலாம்.

**வரைபடம் 3**





**ஆதாரம் : கள ஆய்வு (2022 ஜுன்)**

பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வாக்களிப்பு தொடர்பான திருப்தி நிலை மக்கள் மத்தியில் எவ்வாறு பிரதிபலிக்கப்பட்டுள்ளது என்ற வகையில் 72% மான வாக்காளர்கள் தங்களுடைய வாக்குரிமையின் பிரயோகத்தில் திருப்தியற்ற நிலையில் இருப்பதை காணலாம். இது வாக்குரிமையின் பிரயோகத்தை கேள்விக்குறியாகியுள்ளது. வெறுமனே 28% மான வாக்காளர்களே தங்களது தெரிவுச் சரியானது என்பதில் திருப்தி

கொண்டுள்ளனர். அதிலும் தாங்கள் வாக்களித்து வெற்றிப் பெறாத வேட்பாளர்கள் தொடர்பில், தற்பொழுது அவர்கள் வெற்றி பெறாதது சரியானதே என்ற மனநிலையிலும் காணப்படுகின்றனர்.

தங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஊழல்வாதிகளாக காணப்படுகின்றார்கள் என்பது பெரும்பாலான வாக்காளர்களின் கருத்தாக அமைகிறது. எதிர்பார்த்த ஆக்கபூர்வமான விடயங்கள் எதுவும் தங்களால் தெரிவுச் செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் இருந்து கிடைக்கவில்லை எனவும் தங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை காப்பாற்றவில்லை என்ற காரணங்கள் இவர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆளுமையற்ற அரசியல்வாதியாக செயற்படுபவர்களாகவும் மக்களின் நலனுக்காக அன்றி தங்களது கட்சி நலனை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றமையினால் இவர்கள் மீது அதிர்ப்தி அடைந்ததாக வாக்காளர்கள் குறிப்பிடுகின்றனர்.

***வாக்குரிமையின் பிரயோகத்தில் தாக்கங்களுக்கு உட்படுத்தியக் காரணிகள்***




**வரைபடம் 4**


**ஆதாரம் : கள ஆய்வு (2022 ஜூன்)**

இத்தரவுகளினூடாக பார்க்கின்றப் போது வாக்குரிமையின் பிரயோகத்தின் போது வேறுபட்ட காரணிகள் ஒருவருடைய வாக்கு பிரயோகத்தில் தாக்கம் செலுத்தி இருப்பதை காணமுடிகின்றது. இதில் குடும்பம், சாதி, மதம், அரசியல் கட்சி, இனம் என பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளது. இப்பிரதேசத்தில் மலையகத் தமிழர் மத்தியில் குடும்பமும் அரசியல் கட்சியும் சமமான அளவு தாக்கம் செலுத்தி இருப்பதை காண முடிகின்றது. இவ்விரண்டு காரணிகளும் 35% மான தாக்கங்களை மக்களின் வாக்கு பிரயோகத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது. மேலும் சாதி 3% மாகவும் மதம் 6% மாகவும் தாக்கம் செலுத்தியுள்ளது. இன அடிப்படையில் 19% வாக்குரிமையின் பிரயோகத்தில்

தாக்கம் செலுத்தி இருப்பதை அறியமுடிகின்றது. உண்மையில் வாக்கின் பிரயோகம் என்ற ரீதியில் இப்பிரதேசத்தில் இவ்வாறான காரணிகளின் செல்வாக்கு இன்றும் காணப்படுவதை அறிய முடிகின்றது.

***தமிழ் பிரதிநிதிகளுக்கு மேலாக பெரும்பான்மை இன பிரதிநிதிகள் தமிழ் மக்களுக்குச் சேவை செய்கின்ற நிலை***

பிரதிநிதிகளை தெரிவு செய்து தங்களின் குரலாக பாராளுமன்றத்தில் ஒலிக்க செய்வதற்காக மக்கள் அவர்களை தெரிவு செய்கின்றனர். தங்களது வாக்குரிமையினை முறையாக பிரயோகித்து தங்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் பாதுகாப்பை வழங்குவதான ஒரு சிறந்த தலைவனாக தங்களது பிரதிநிதிகளை பார்க்கின்றனர். அதுமட்டுமன்றி தங்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதி தாங்களுக்கு எந்நிலையிலும் துணை கொண்டு செயற்பட வேண்டும் என்றும் தங்களுக்கான உதவிகளை தயங்காது செய்ய வேண்டுமென்றும் வாக்காளர்கள் எதிர்ப்பார்த்த வகையில் அந்த பிரதிநிதியை தேர்தலில் வெற்றிபெற செய்கின்றனர். இதன்படி பதுளை தேர்தல் மாவட்ட தமிழ் பிரதிநிதிகளை விடவும் பெரும்பான்மையின பிரதிநிதிகள் தமிழ் மக்களுக்கு சேவை செய்கின்ற போக்கு தொடர்பில் பெறப்பட்ட தரவுகள் வரைபடமாக காட்டப்பட்டுள்ளது.




**வரைபடம் 5**

**ஆதாரம் : கள ஆய்வு (2022 ஜூன்)**

பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பெரும்பான்மையினப் பிரதிநிதிகள் தமிழ் மக்களுக்கு அதிகமாக சேவை செய்கின்ற ஒரு நிலை காணப்படுவதினை அறியமுடிகின்றது. 60மூ மான வாக்காளர்கள் தங்களுக்கான உதவிகளை பெரும்பான்மையின பிரதிநிதிகள் செய்வதாக குறிப்பிட்டுள்ளனர். 40% மான மக்கள் தங்களுக்கான உதவிகளையும் சேவைகளையும் பெரும்பான்மையின பிரதிநிதிகளை விட தமிழ் பிரதிநிதிகள் செய்வதாக கூறியுள்ளனர். இருப்பினும் பெருவாரியாக பெரும்பான்மையின வேட்பாளர்கள் தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டு பொது நலத்தோடு செயற்படுகின்ற போக்கு இப்பிரதேசத்தில் காணப்படுவதாகவுள்ளது.

***கட்சி தாவுதல் தொடர்பான மக்களின் கருத்துக்கள்***


மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கட்சி மாறுதல் என்பது வாக்களித்த மக்களை ஏமாற்றும் ஒரு விடயமாகும். இவ்வாறு கட்சி மாறுகையில் அது தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு சட்டங்கள் கடினமாக்கப் படவேண்டும். அதனோடு கட்சி மாறுகின்றப் போது பிரதிநிதித்துவம் இழக்கப்பட வேண்டும் என பல விடயங்களை இம் மக்கள் தரவுகளாக வழங்கியுள்ளனர். இவ்வாறு கட்சி மாறுகின்றப் பிரதிநிதிகளை மக்கள் தங்களை ஏமாற்றுபவர்களாகவும் விலைபோக கூடியவர்களாகவும் அடையாளம் படுத்துவதை அவதானிக்கலாம்.

தாங்கள் சிறுபான்மையின மக்கள் என்ற வகையில் தங்களால் சுயமாக அதிகாரத்தை பெற்றுக்கொள்ள முடியாது. ஆகையால் கிடைக்கப் பெறும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி மக்களின் கருத்துக்களுக்கும் செவிமடுத்து அவர்களின் சம்மதத்தின் பேரில் சரியான நேரத்தில் கட்சி மாறுவது ஏற்றுக்கொள்ள கூடியது என்றக் கருத்துக்களை மக்கள் வழங்கியுள்ளனர். சிலர் இவ்வாறு அரசியலில் நிகழ்வது சாதாரண விடயம் என்றும் அது அரசியல் தந்திரம் என்றும் தங்களுடைய கருத்துக்களை கூறியுள்ளனர்.

***புதிய பாராளுமன்ற தேர்தல் தொடர்பான மக்களின் எதிர்பார்ப்பு***

வாக்குரிமையினைக் கொண்டுள்ள வாக்காளர்கள் தங்களது வாக்களிப்பின் மூலமாகத்தான் தமக்கான மற்றைய உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என உணர்கின்ற போது நடைமுறையில் தங்களது பிரதிநிதியினுடைய செயற்பாடு அல்லது நடைமுறை அரசியல் நிலை என்பவற்றை கவனத்தில் கொண்டு தங்களுடைய வாக்கினை பிரயோகிக்க, புதிய தேர்தல் ஒன்றின் அவசியம் தொடர்பில் இம்மக்களிடம் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளது.

**வரைபடம் 6**




**ஆதாரம் : கள ஆய்வு (2022 ஜுன்)**


பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பார்க்கின்ற போது 86% மான வாக்காளர்கள் தாங்கள் புதிய பாராளுமன்ற தேர்தல் ஒன்றினை எதிர்ப்பார்த்து தங்களுடைய வாக்குரிமையை பிரயோகிக்க காத்திருப்பதாக கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளதை அவதானிக்க

முடிகின்றது. அதனோடு 14% மான வாக்காளர்கள் தற்போதைய சூழலில் தேர்தல் ஒன்று அவசியமற்றது, தங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளே இவ்வாறு நாட்டை சீர்குலைத்து விட்டார்கள் என்ற கருத்தினையும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். எவ்வாறு இருப்பினும் இம்மக்கள் தங்களுடைய வாக்குரிமையின் மூலமே அரசியல் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நிலையில் இருப்பது புலனாகின்றது.

***இளைஞர்களின் அரசியல் பிரவேசம்***

வாக்குரிமையின் எதிர்கால பிரயோகத்தின் எதிர்பார்ப்பு என்ற ரீதியில் இளைஞர்களுடைய அரசியல் பிரவேசம் மிக முக்கியமாக தற்போது உணரப்பட்டுள்ளது. இளைஞர்களின் அரசியல் எவ்வளவு தூரம் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது என்பது பிரதான விடயமாக இன்று பார்க்கப்படுகின்றது. அதன்படியே பதுளை தேர்தல் மாவட்ட மலையக தமிழ் வாக்காளர்களிடம் முன்வைக்கப்பட்ட இளைஞர்களின் அரசியல் பிரவேசம் தொடர்பிலான தரவு சேகரிப்பில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பின்வரும் வரைபடம் அமைக்கப்பட்டுள்ளது.

**வரைபடம் 7**




**ஆதாரம் : கள ஆய்வு (2022 ஜூன்)**

பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பார்க்கின்றபோது இளைஞர்கள் அரசியலில் ஆர்வம் காட்ட வேண்டும், அவர்களுடைய அரசியல் பிரவேசம் என்பது இன்றியமையாதது என்பதை உணர்ந்தவர்கள் 94% மானவர்களாகக் காணப்படுகின்றனர். குறிப்பாக தங்களுடைய எதிர்கால வாக்குரிமையின் பிரயோகத்தில் பெரும்பாலான தெரிவுகள் இவ்வாறு இளைஞர்களை நோக்கி செல்லக்கூடிய வாய்ப்பு காணப்படுவதாக இதிலிருந்து நாம் பார்க்கலாம். அதேசமயம் இளைஞர்களுடைய அரசியல் பிரவேசம் அவசியமற்றது என்ற நிலையில் 6% மான வாக்காளர்கள் காணப்படுவதையும் இங்கு அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

**கலந்துரையாடல்**

2020ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் இம்மக்கள் தங்களுக்கான மூன்று வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு அதிகமாகக் காணப்பட்ட நிலையில் நிராகரிக்கப்பட்ட வாக்குகள், பொதுஜன பெரமுன கட்சியின் வியூகம் என்பவற்றில் சிக்கிய பதுளை தேர்தல் மாவட்ட மலையகத் தமிழ் வாக்காளர்கள் தங்களுக்க தெரிவு செய்யப்படவேண்டிய மூன்றாவது பிரதிநிதித்துவத்தினை இழந்தனர். அதுமட்டுமன்றி பொதுஜன பெரமுன கட்சி சார்பில் போட்டியிட்ட பலம் பொருந்திய ஆறு பெரும்பான்மையின வேட்பாளர்கள் வெற்றி கண்டனர்.

வாக்குரிமையின் தெளிவு பற்றிய தகவல்களில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இப்பிரதேச மக்களிடம் பெரும்பான்மையான வாக்காளர்கள் தங்களுடைய உரிமை தொடர்பாக அறிந்துள்ளனர். இங்கு குறிப்பிட்ட சில வாக்காளர்கள் தங்களுடைய வாக்குரிமை தொடர்பில் அறியாதவர்களாக உள்ளனர். வாக்குரிமையின் முக்கியத்துவம், பாராளுமன்றத் தேர்தல் முறைத் தொடர்பான விளக்கங்கள், வாக்களிப்பு தொடர்பான அறிவூட்டல் மக்களிடம் சென்றடைந்த விதம் தொடர்பில் பெறப்பட்ட தரவுகளினூடாக வாக்குரிமையின் முக்கியத்துவத்தினை பற்றி அறிந்தவர்கள் பாராளுமன்ற தேர்தல் முறை பற்றி அறிந்துள்ளதோடு இவர்களுக்கு வாக்குரிமை பற்றிய அறிவூட்டல் போதுமானதாக கிடைத்துள்ளது. ஆனால் வாக்குகளை வீண்விரயமாக்கும், பெரும்பான்மையின கட்சியின் வியூகத்தில் விழும் வாக்காளர்கள் மேற்கூறப்பட்ட விடயங்களில் பின் தங்கிய நிலையில் இருப்பதை அறிய முடிகின்றது. வேட்பாளர்களைத் தெரிவுச் செய்கின்ற போது ஆய்வுப் பிரதேச மக்களின் கவனயீனம் வெளிப்படுத்தப்படுவதை அறியமுடிகின்றது. காரணம் தேர்தல் என்பது குறிப்பிட்ட காலப்பகுதியை மையமாகக் கொண்டது என்ற கருத்தை இவர்கள் கொண்டுள்ளதோடு அந்த தேர்தல் காலத்தில்தான் வேட்பாளர்களும் வாக்காளர்களும் சந்திக்கின்ற ஒரு நிலையும் காணப்படுகின்றது.

2015 மற்றும் 2020ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் ஆய்வுப் பிரதேச மக்களுடைய பங்களிப்பு தொடர்பாக பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பதுளை தேர்தல் மாவட்ட மலையக தமிழ் வாக்காளர்கள் அதிகமாக வாக்களிப்பில் ஈடுப்பட்டுள்ளதாக தரவுகள் குறிப்பிடுகின்றன. அதேசமயம் வேட்பாளர்கள் மீது வெறுப்படைந்தவர்கள், வேலை நிமித்தம் வெளிநாடு சென்றவர்கள், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் வாக்களிக்க முடியாத சில காரணங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளது. வாக்களித்து அதன் மூலம் வெற்றியினை கொண்டாடிய வாக்காளர்கள் தங்களது பிரதிநிதிகள் தொடர்பில் குறிப்பிட்ட காலத்திற்குள் தமது பிரதிநிதிகள் மீது நம்பிக்கையினை இழந்துள்ளனர். இவர்கள் மக்கள் நலன் சார்ந்து செயற்படாது சென்றுள்ளதாகவும் தங்களுடைய வாக்களிப்பின் தன்மையினை கேள்விக்குறியாக்கியுள்ளதாகவும் மக்கள் பிரதிநிதிகள் மீது எதிர்மறையான கருத்து நிலையில் உள்ளனர்.

உண்மையில் பெரும்பான்மையின பிரதிநிதிகளின் வியூகம் என்பது இம்மக்களிடம் நன்றாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது இங்கு புலப்படுகின்றது. இருப்பினும் புதிய மாற்றம், அரசியலில் புதுமுகங்கள், இளைஞர்களுடைய அரசியல் பிரவேசம் தொடர்பில் மக்கள்

மத்தியில் ஆக்கபூர்வமான கருத்துக்கள் தற்போது எழுந்துள்ள நிலையினையும் காணமுடிகின்றது. பகுப்பாய்வின் அடிப்படையில் வாக்குரிமையின் பிரயோகத்தில் வாக்குகளை வீண்விரயமாக்குதல், தங்களுக்கான பிரதிநிதித்துவத்தினை கவனத்தில் கொள்ளாது கட்சி சார்பாக செயல்பட்டு வாக்களித்தல் தொடர்பில் சில வாக்காளர்கள் தெளிவுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கான பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள் என்பன இம் மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கப்பட வேண்டிய ஒரு கடப்பாடு ஏற்பட்டுள்ளது.

இக் குறைபாடுகளை மையப்படுத்தி அவற்றை நிவர்த்தி செய்யும் போது சிறந்த வாக்குப்பிரயோகத்தை ஏற்படுத்தலாம். புதிய வாக்காளர்களை அரசியல் ரீதியாக அறிவூட்டி அவர்களை சிறந்த அரசியல் கலாசாரத்திற்கு பயிற்றுவிக்க வேண்டும். இதற்காக பாடசாலைகள், சமூக நிறுவனங்கள் மட்டத்தில் வேலைத்திட்டங்களை செய்ய வேண்டும். தேர்தல் முறைமைகள் தொடர்பில் தெளிவான விடயங்களை இப்பிரதேச மலையகத் தமிழ் வாக்காளர்களிடையே கொண்டுச் சேர்க்க வேண்டும். பாராளுமன்ற தேர்தல் தொடர்பிலான விளக்கங்களை வாக்காளர்களுக்கு விளங்கும் வகையில் வாக்களிக்கும் விதத்தை மிகத் தெளிவாக அவர்களுக்கு கொண்டுச் சேர்க்க வேண்டும. இதற்காக பதுளை மாவட்டத்தில் காணப்படுகின்ற மலையக கல்விமான்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வாலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சமூகநல செயற்பாட்டாளர்கள் எனப் பல தரப்பினர்களை உள்ளடக்கிய நடுநிலைத் தன்மையுடன் செயற்படக்கூடிய அமைப்பொன்றினை உருவாக்கி அதனூடாக மலையக தமிழ் மக்களுக்கான அறிவூட்கள் வழங்கப்படுகின்றப் போது முறையாக வாக்குகளைப் பயன்படுத்தி தங்களது பிரதிநிகளை தேர்தலில் வெற்றிப்பெறச் செய்ய முடியும்.

**முடிவுரை**

பிரதிநிதித்துவம் தொடர்பிலான கருத்துக்கள் இன்று பிரதான பேசுபொருளாக மாறியுள்ள நிலையில் வாக்குரிமையின் பிரயோகத்தின் முக்கியத்துவமும் பெரும்பாலானவர்கள் உணர்ந்துள்ளனர். வாக்குரிமையின் பிரயோகம் தொடர்பில் தரவுப்பகுப்பாய்வின் படி இறுதியில் சில முடிவுகள் எட்டப்பட்டுள்ளது. பதுளை தேர்தல் மாவட்ட மலையகத் தமிழ் வாக்காளர்கள் புதிய பாதையில் செல்வதற்கான ஆயத்த நிலையில் இருப்பது புலனாகின்றது. இருப்பினும் தங்களுடைய பிரதிநிதித்துவம், வாக்களிப்பு சம்பந்தமாக இம்மக்களிடம் சில குறைபாடுகளையும் அவதானிக்க முடிகின்றது. இப் பிரதேச மலையக தமிழ் வாக்காளர்கள் என்ற அடிப்படையில் பார்க்கின்றபோது 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தாங்கள் தெரிவு செய்த தமிழ் பிரதிநிதிகளையே மீண்டும் 2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தெரிவு செய்துள்ளனர். இந்தப் பிரதிநிதிகள் மீதான நம்பிக்கை மக்களிடம் காணப்பட்ட போதிலும் நடைமுறை விடயங்களை வைத்து பார்க்கின்றபோது பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வாக்குரிமையின் எதிர்கால பிரயோகம் தொடர்பில் பல்வேறுபட்ட மாற்றங்கள் நிகழக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இதன் அடிப்படையிலேயே பெரும்பாலான மலையகத் தமிழ் மக்கள் புதிய தேர்தலுக்கான எதிர்பார்ப்பில் உள்ளனர். இவ்வாறு இவ் ஆய்வின் அடிப்படையில் இம்மக்கள் அரசியல் ரீதியாக அக்கறைக் கொண்டு சிந்தித்து செயல்படக்கூடிய நிலையில் இருப்பது தெரிவதோடு கடந்த தேர்தல்களில் இவர்கள் விட்ட பிழைகளையும் வாக்குரிமையின் பிரயோகத்தினையும் அறிய முடிகின்றது.

**உசாத்துணைகள்**


Adaderana. (2015, August 18). Preferential votes- General Election 2015. *Adaderana.lk.* Retrieved September 04, 2023, from *https://www.adaderana.lk/news.php?nid=32022*

Ceylon Today. (2020,August 07). General Election 2020: Preferential votes of Badulla District. *Ceylon Today*. Retrieved September 04, 2023, from *https://archive.ceylontoday.lk/news/general-election-2020-preferential-votes-of-badulla-district*

Election Commission of Sri Lanka. (2015). Parliamentary Elections 2015 Districts Results by Polling Division and All Island Results. Election Commission of Sri Lanka. Retrieved September 05, 2023, from *https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/parliamentary-elections/general-election-2015.pdf*

Election Commission of Sri Lanka. (2020). Parliamentary Elections 2020 Seat Allocation by Party Electoral District - 19 - Badulla. Election Commission of Sri Lanka. Retrieved September 05, 2023, from https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/parliamentary-elections/Badulla_R2.pdf

Nadesan,S. (1993). A History of The Upcountry Tamil People. A Nandalala Publication Sri Lanka.

Wickramarathne,S. (2016). Donoughmore Reforms and the Social Evolution. In S.Watagedara (Ed.), *Universal Suffrage 1931 - 2016 From Donoughmore Commission to Election Commission* (pp.166-147). Election Commission of Sri Lanka.

இரகுநாதன்.க.(2008).*தேர்தல் முறைமைகளும் அவற்றின் பரிமாணங்களும்.* குமரன் புத்தக இல்லம்.

சந்திரபோஸ்.ஏ.எஸ், ரமேஷ்.இரா.(2018*).இலங்கையில் தேயிலை பெருந்தோட்ட சமூகம் 150 வருடங்கள் 1867 தொடக்கம் 2017.* எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிடட் வெளியீடு.

லோறன்ஸ்.அ.(2006).*மலையகம் - சமகால அரசியல், அரசியல் தீர்வு.* மலையகம் வெளியீட்டகம்.

ஜயதேவ உயங்கொட.(1998).*தோட்டப்புற அமைப்பின் மனித உரிமைகள்.* இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம்.